JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

# ரத்தம்!

வசிகரமான வார்த்தை! உணர்ச்சிமிக்க வார்த்தை.. வரலாறெங்கிலும் மக்களை மயக்க பல்லாயிரம் முறை பல்லாயிரம் தலைவர்கள் உச்சரித்த வெப்பம் மிகுந்த வார்த்தை. சிலருக்கு இது அதிர்ச்சியூட்டும் வார்த்தை. இன்னும் சிலருக்கோ அருவருப்பான வார்த்தை.

ஒவ்வொரு விதமான உணர்வை உருவாக்கும் இந்த ரத்தம்தான் இப்படத்தின் அடித்தளம். அதற்கு பல காரணங்கள் உண்டு, வீரம் நிலைநாட்ட வேண்டி நடைபெற்று வந்த உலக போர் மரபில் பொருட்கள் சூறையாடப்பட்டு, ரத்த கலப்பு அறங்கேறிய அந்த கலப்பு நாட்களில் கசங்கிப்போன இனமக்களின் கடைசி சொட்டு ரத்தம் வரலாற்று ஏடுகளில் ஈரம் காயாமல் படர்ந்திருப்பதுதான்.

வேற்று மொழிக்காரர்களை நான் சந்திக்க நேரும்பொழுது முதலில் அவர்களிடம் நான் கேட்கும் கேள்வி உங்கள் மொழியில் ரத்தத்திற்கு என்ன பெயர்?.

ஒரு முறை என் நண்பன் என்னிடம் கேட்டான், 'ரத்தம'; என்ற வார்த்தையை உபயோகிக்காமல் இந்த உலகில் ஏதேனும் ஒரு தேசத்தின் வரலாறு எழுதப்பட்டிருக்கிறதா?







எல்லோரிடமும் ரத்தம் தொடர்பான நினைவுகள் இருக்கும்.

- எப்பொழுதோ காய்கறி நறுக்கும் பொழுது கைவிரலில் காயம்பட குருதி கசியும், அவ்விரலை வாயில் வைத்து உறுஞ்சியதாக இருக்கலாம்.
- சாலையில் விபத்தாகி தலையெங்கும் ரத்தம் கொப்பளிக்க துடித்துக்கொண்டிருக்கும் ஒரு இளைஞனின் அகோர முகம் ஞாபகத்திற்கு வரலாம்.
- போர் குறித்த செய்தியொலிக்கும் தொலைக்காட்சியில் தலையற்ற ஒரு குழந்தையை பார்த்த ஞாபகம் எழலாம்.
- பெண்களை கேட்கவேண்டியதில்லை மாதத்தில் மூன்று நாள் உதிரத்தோடுதான் அவர்கள் வாழ்க்கை.

இப்படி எல்லோருக்கும் ரத்தம் என்றால் உடனே மனதில் தோன்றும் ஒரு காட்சி இருக்கும். சிறிய அல்லது கொஞ்சம் பெரிய கதைகள் கூட இருக்கலாம். என்னிடமும் அப்படியொரு கதை இருக்கிறது. “அரிமுகமில்லாத இளைஞன் ஒருவன் யுத்த பூமிக்கு இரத்தம் சுமந்ததனால் மாவீரனாகிய சரித்திரக்கதை.”

**இரத்தத்தை சிந்தித்தான்**
**ஈழமக்களின் உயிரைக்காக்க**
**இரத்தம் சேகரிக்க முடிந்தது...**
**(என்பதை அவர்கள் எப்படி**
**அறிவார்கள்?)**

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

JPS 2.jpg

# கதை சுருக்கம்

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

அது ஒரு கடற்கரை பூமி. கரை தாண்டிய கடலுக்கு உயிர், உறவுகளை தாரை வார்த்து விட்ட பட்டினிக்கிராமம். நிச்சயமற்ற வாழ்க்கைக்காக அலையோடும் வலையோடும் தங்களையே அடகு வைத்துவிட்ட சாதாரண மனிதர்கள் வாழும் பகுதி அது. அந்த உப்பு நிலமெங்கிலும் கருவாட்டு வாசனை குடல் நிரப்பும். தமிழக வரைபடத்தில் குண்டூசி புள்ளியாய் கண்சிமிட்டிக் கொண்டிருக்கும் அந்த கிராமம்தான் அக்கரைப்பேட்டை.



அங்குள்ள சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் செல்வா (கதையின் நாயகன்). நல்ல வாட்ட சாட்டமான அழகிய இளைஞன். 28 வயதை எட்டி பிடித்திருந்தான், கடல் சீற்றம் தணிந்த ஒரு அந்திப் பொழுதில் கடலுக்கு போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்ற தனது அப்பா இன்றுவரை கரைக்கு திரும்பாததை எண்ணி அவரின் நினைவுகளுடன் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் அம்மா மற்றும் வயதான தாத்தா பாட்டி இவர்களுடன் ஒரு சிறிய ஓட்டு வீட்டில் வசித்து வருகிறான் செல்வா.

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009



இவன் இன்பத்தையும் துன்பத்தையும் பங்குபோட நான்கு நண்பர்கள். பத்தாம் வகுப்பு படிக்கும்பொழுதே படிப்பிற்கு முழுக்கு போட்டுவிட்டு நாகப்பட்டினத்திலுள்ள சாதிக்பாய் என்பவருக்கு சொந்தமான போட்யார்டில் நண்பர்களோடு வேலைக்கு சேர்ந்துவிட்டான். அவர்களில் ரவி என்பவன் மட்டும் தற்பொழுது ஸ்கூல் ஆட்டோ ஓட்டி வருகிறான். செல்வாவிற்கு பெரிதாக சொல்லிக்கொள்ளும்படியான படிப்பேதும் அவனிடம் இல்லையென்றாலும் உலக விஷயங்கள் அனைத்தும் அவனுக்கு அத்துப்படி. படகு கட்டுவதிலும் பழுதுபார்ப்பதிலும் செல்வாவிற்கு நிகர் நாகை ஜில்லாவிலேயே யாரும் கிடையாது. அந்த அளவுக்கு திறமைசாலி. அதே தருணத்தில் சாதிக்பாய் மனதார நம்பும் ஒரே ஆளும் இவன்தான். அவனது கடின உழைப்பாலும் முயற்சியாலும் பாயின் செல்லப்பிள்ளையாக மாறியிருந்தான் செல்வா. சாதிக்பாயும் அவன் மீது அளவுகடந்த பாசத்தையும், அன்பையும் வைத்திருந்தார்.



JPS 4.jpg



பரம்பரை பரம்பரையாக படகு கட்டும் தொழில் செய்து வரும் சாதிக் பாய் வசதிப்படைத்த எளிய மனிதர்.

‘ஷபானா’ பாயின் ஒரே மகள். அதுவும் ஆசை மகள், நாகையில் உள்ள தனியார் பள்ளியொன்றில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறாள். எப்போதும் துறுதுறுவென்றிருக்கும் குறும்புக்கார சிறுமி அவள். ஷபானாவும் செல்வாவும் உடன் பிறக்காதது ஒரு குறை மட்டும்தான் மற்றப்படி இருவரும் அண்ணன் தங்கையாகவே வளம்வந்தனர். ஷபானாவை தினமும் பள்ளிக்கு அழைத்துப்போய் விட்டுவருவது செல்வாதான்.

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009



JPS 5.jpg

# JOHN PAUL SWAMINATHAN
## COPY RIGHT 2009



ஒரு நாள் மாலை ஷபானாவும் செல்வாவும் கடற்கரையோரம் விளையாடிக்கொண்டிருக்க அவ்வழியே வந்த பெண்மீது எதேச்சையாக மோதிவிடுகிறான் செல்வா. அது இருவருக்கும் சிறு சண்டையாக உருவெடுத்தது. பின் ஒரு உரசலுடன் அறிமுகம் ஏற்படுகிறது.

அந்த பெண்தான் ஜான்சி (நம் கதையின் நாயகி). 25 வயது நிரம்பியிருக்கும் அழகு தேவதை. நடுத்தரக் குடும்பத்தை சேர்ந்த ஜான்சியின் அப்பா ஒரு ஓய்வுபெற்ற ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர். அம்மா ஹவுஸ்வைஃப். அண்ணன் சந்ரு பக்கத்து ஊரிலுள்ள மீன்பிடி அமைப்பு கழகத்தில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறான். அவில்தாராக இருந்த ஜான்சியன் பாட்டனார் கட்டிய பழங்காலத்து ஓட்டு வீட்டில்தான் ஜான்சியின் குடும்பம் வசித்துவருகிறது. ஜான்சி எம்.எஸ்.சி கணிதம் படித்துவிட்டு ஷபானா படித்தக்கொண்டிருக்கும் பள்ளியில் கணித ஆசிரியையாக வேலைக்கு சேர்ந்து ஒரு வாரம்தான் ஆகிறது.



வழக்கம்போல் பள்ளிக்கு போன ஷபானாவுக்கு அதிர்ச்சி ஒன்று காத்திருந்தது. வேறொன்றுமில்லை முதல்பொழுதில் கடற்கரையில் செல்வாவும் தானும் வம்புக்கிழுத்த அந்த பெண்தான் அவளுக்கு புதிதாக வந்திருக்கும் கணித ஆசிரியை ஜான்சி என்று தெரியவருகிறது. மாலை வீடு திரும்பிய ஷபானா இது பற்றி செல்வாவிடம் கூற உற்சாகத்தின் உச்சத்திற்கே போய் வந்தான் செல்வா. முதல்நாள் ஜான்சியை சந்தித்தபோதே அவள் மீது இவனுக்கு ஒரு இனம் புரியாத ஈர்ப்பு. முதல் பார்வையில் காதல் சாத்தியமா? என்று எண்ணியிருந்தவனுக்கு ஷபானா படிக்கும் பள்ளியில் அவள் ஆசிரியையாக இருப்பது மிகுந்த சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் தந்தது.






இதற்கிடையில் செல்வாவின் நண்பன் ரவி சவாரிக்கு வந்துபோன ஒரு குடும்பம் விட்டுச்சென்ற மணிபர்சை அவனிடம் காண்பித்தான், பர்ஸ்க்குள் மூன்று ஐநூறு ரூபாய் நோட்டும் ஒரு ரெயில்வெ ஐடின்டி கார்டும் இரண்டொரு விசிட்டிங் கார்களோடு ஒரு திருமணப் புகைப்படமும் இருந்தது. அந்த பர்ஸ்ஸை உரியவாரிடம் கொடுக்கவேண்டும் என்று ரவி கேட்டுக்கொண்டதிற்கிணங்க அம்முகவரியை தேடி இருவரும் போகிறார்கள். முடிவில் அது ஜான்சியின் வீடாக இருந்தது. பார்த்தமாத்திரத்தில் பரவசமான செல்வாவின் இதயத்திற்குள் வந்த இரண்டாவது சந்திப்பாக மாறிப்போனது.

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

அதன் பின் ஷபானாவை ஸ்கூலில் விட்டு வரும்போது ஜான்சியை பார்த்து வந்தான் செல்வா. இப்படி போய்க்கொண்டிருந்த செல்வாவின் மகிழ்சிகரமான நாட்களில் திருப்பம் ஒன்று நிகழ்ந்தது. அவன் வேலை செய்துவரும் போட் யார்டுக்கு பக்கத்தில் உள்ள ரெயில்வே மேம்பாலத்தில் குழந்தையின் உயிரை காப்பாற்றுகிறான் செல்வா. அந்த உள்ளூர் தொலைக்காட்சியிலும் அதன்பின் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பாராட்டுதலையும் பெறுகிறான் செல்வா. இதை கேள்விபட்ட மாத்திரத்தில் ஜான்சியின் மனமெல்லாம் நிறைந்துவிட்டான் செல்வா. அதற்குபிறகு இருவரும் அடிக்கடி கடற்கரையில் உள்ள படகுத்துறையில் சந்தித்து காதலை வளர்த்து வந்தனர்.





ஒரு கட்டத்தில் ஷபானாவிற்கு டியூஷன் டீச்சராக வந்துபோக செல்வாவிற்கும், ஜான்சிக்கும் இடையே உள்ள நெருக்கம் அதிகமாகி அசைக்க முடியாத காதலாக மாறிவிட்டது. அவர்களிருவருக்கும் இடையே உள்ள காதல் பாய் வீட்டு பங்களாவில் சமையல் வேலை பார்த்துவரும் மரகதத்தின் மூலமாக சாதிக் பாய்க்கு தெரியவருகிறது. செல்வாவின் வாய் வார்த்தைக்காக தக்க தருணம் பார்த்து காத்திருக்கிறார் பாய்.

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

இதற்கிடையில் வழக்கத்திற்கு மாறாக ஒரு புது வித படகொன்றை செல்வாவிடம் வடிவமைக்க சொல்கிறார் பாய். எந்த படகை செய்வதாக இருந்தாலும் அனைத்து விபரமும் செல்வாவிடம் ஒன்றுவிடாமல் சொல்லிவிடுவார் பாய். ஆனால் முதல் முறையாக எதுவும் சொல்லாமல் அவர் வடிவமைக்க சொல்லியிருந்தது செல்வாவிற்கு ஒன்றும் புலப்படமால் இருந்தது. இப்போதெல்லாம் அடிக்கடி வெளியூர் போகும் சாதிக்பாய் செல்வாவிடம் எதுவும் சொல்லி விட்டு போகிறதில்லை. அதுவும் முன் பின் தெரியாத சில நபர்கள் பாய் வீட்டில் சங்கமிப்பதும் அவருடன் ரகசியமாக உறையாடுவதும் செல்வாவிற்கு அவர் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.





ஒருநாள் பாயிடமிருந்து வந்த அலைப்பேசி அழைப்பின்படி டெல்லியிலிருந்து இங்குள்ள கழுவன் திட்டுப்பகுதிக்கு கடல்வாழ் உயிரினங்களை பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு பாயின் நண்பரின் மகள் வருவதாகவும் அப்பெண் இரண்டு நாட்கள் நாகப்பட்டினத்திலுள்ள ஹோட்டல் நீம்ராவில் தங்குவதாகவும் அவளுடன் கூட இருந்து கைடு பண்ணும்படி தகவலை பெறுகிறான் செல்வா. அதன்படி அந்த இளம்பெண்ணை அழைத்துக்கொண்டு வரும் செல்வாவை திருப்பத்தில் பார்த்துவிடுகிறாள் ஜான்சி. செல்வா பைக் ஓட்ட பின்னால் அவனது தோளை பிடித்தபடி அமர்ந்திருக்கிறாள் அந்த இளம்பெண். இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த ஜான்சி செல்வாவை தொடர்புகொள்ள அவனது போன் சுவிட்ச் ஆப் ஆகியிருக்கிறது.

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

மறுநாள் தான் அவனை பார்க்க வேண்டும் என்று செல்கிறாள் ஜான்சி. வழக்கமாக அவர்கள் சந்திக்கும் படகு துறையில் அவனுக்காக காத்திருக்கிறாள். செல்வா வரவில்லை துரதிஸ்டவசமாக பாய் வீட்டில் தங்க நேரிடுகிறது. காத்திருந்து பொருமையிழந்த ஜான்சி திரும்பி வரும் வழியில் சாதிக்பாய், அந்த இளம்பெண், செல்வா, ஷபானாவை பார்த்து விடுகிறாள். செல்வாவின் மீது அடிக்கடித்தொட்டு எதையோ பேசி அவள் சிரித்துக்கொண்டிருப்பதை பார்க்கமாட்டாது மனம் வெடித்து வீடு திரும்புகிறாள் ஜான்சி.






வீடு திரும்பியவளுக்கு இன்னுமொரு அதிர்ச்சி காத்திருக்கிறது. அன்று மதியம் சந்துருவின் பைக்கை செல்வா மோதிவிட்டதாகவும் அதைக்கேட்ட சந்துருவை அடித்துவிட்டான் எனவும் கேள்வி பட கோபத்தின் கடைசி விளிம்பிற்கு சென்ற ஜான்சி செல்வாவை விட்டு விலகுவதற்கு தீர்மானித்து மறுநாள் கடற்கரையில் இருந்து செல்வாவிடம் பிரிந்து வருகிறாள்.

எவ்வளவு எடுத்துச்சொல்லியும் தன்னை சந்தேகித்துவிட்ட ஜான்சிக்கு உண்மை தெரியும்வரை தான் பார்க்கவோ பேசவோ மாட்டேன் என்று உறுதி கூறுகிறான் செல்வா...

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

இது ஒரு புறமிருக்க செல்வாவினால் வடிவமைக்கப்பட்ட படகானது அசோக் மூலம் வெள்ளோட்டத்திற்கு எடுத்துப்போகப்படுகிறது. இதனால் ஆத்திரமுற்ற செல்வா எதையும் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் போட் யார்டுக்கு வேலைக்கு போகாமல் வீட்டிலேயே முடங்கி விடுகிறான். நண்பர்கள் எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் செல்வாவின் மனது மாறாமல் இருந்தது.








ஒரு புறம் புரிந்து கொள்ளாத காதலி மறுபுறம் புரிந்து கொண்ட மனிதர்(பாய்) தன்னை விட்டு விலகுவது இப்படி இரண்டு நிலைகளிலும் மனம் வெதும்பியிருந்த செல்வாவைப் பற்றி கேள்விபடுகிறார் பாய். உடனே அசோக்கை கூப்பிட்டு அவனை அழைத்துவர சொல்கிறார். அதன்பின் மனவோட்டத்தை அறிந்த சாதிக் பாய் தான் எதற்காக ரகசியபடகை தயார்செய்ய சொன்னதும் அதைப்பற்றி செல்வாவிடம் சொல்லாததும் ரகசியமாக தங்கியிருப்பவர்கள் யார் என்றும் தெளிவுபட விளக்கிவிட்டு ஒரு சிடியை அவன்முன் போட்டுக்காட்டுகிறார் சாதிக்பாய். அவையனைத்தும் “ஈழப்போரின் வலி நிறைந்த காட்சிகள்”. இப்படி பாதிக்கப்பட்டவர்களுக்காக மருத்துவ உதவி நாடி வந்திருக்கும் அவர்களுக்கு உதவிசெய்யத்தான் இப்படி ரகசியமாக நடந்து கொண்டதாக கூறிமுடித்தார் பாய். இவற்றையெல்லாம் இமைக்கொட்டாமல் பார்த்திருந்த செல்வா ஒருவாறு மனம் மாறியிருந்தான்.

JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

ஈழத்திலிருந்து வந்திருப்பவர்களை அவர்கள் எல்லை வரை கொண்டுசேர்க்கும் பொறுப்பினை அசோக்தான் ஏற்றிருக்கிறான் என்று பாய் சொன்ன மறுகனமே, தானும் போவதாக அவரிடம் வாதிடுகிறான் செல்வா. சாதிக் பாய் எவ்வளவோ சொல்லியும் தன் முடிவிலிருந்து மாறாத செல்வாவின் விருப்பத்திற்கு இறங்கி அவன் போக சம்மதிக்கிறார். குறிப்பிட்ட நாளில் ஈழத்து தோழர்களுடன் செல்வா, அசோக், மற்றும் மருந்து பெட்டிகளுடன் படகு ஈழம் நோக்கி செல்கிறது. வழியில் அவர்கள் எதிர்பாராத விதமாக சிங்கள ராணுவத்திடம் பிடிபட்டு விடுகின்றார்கள்.







JOHN PAUL SWAMINATHAN
COPY RIGHT 2009

அவர்களை கைது செய்து மருந்துபெட்டிகளுடன் கொலை முகாமிற்கு அழைத்துப்போகையில் இராணுவ ஊர்தியிலிருந்து நால்வரும் தப்பிக்கிறார்கள். அதில் தேவராஜும் அசோக்கும் உயிர் துறக்கிறார்கள். பலத்த போராட்டத்திற்கு பிறகு தமிழகத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட மருந்து பெட்டிகள் பத்திரமாக தமிழர்பகுதி மருத்துவமனைக்கு கொண்டு சேர்க்கப்படுகிறது. இதற்கிடையில் உண்மையை உணர்ந்துகொண்ட ஜான்சி செல்வாவின் வருகையை எதிர்பார்த்து ஏங்கியபடி காத்திருக்கிறாள். ஈழத்திலிருந்து மீண்டு வந்து ஜான்சியின் கரம் பற்றினானா? இல்லையா? என்பது தான் மீதக்கதை.